

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக செயல் வீரர்கள் கூட்டம் காக்களூரில் ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன் ஏற்பாட்டில் பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சரும்,மாவட்டசெயலாளருமானஆவடிசா.மு.நாசர் 18 தேதி திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தரும் கழக தலைவர் அவர்கள் நிகழ்ச்சி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, கே.ஜெ.ரமேஷ்,மா.ராஜி,காயத்ரிஸ்ரீதரன்,கே. கே.சொக்கலிங்கம், தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், சீனிவாசன், ராமச்சந்திரன், பரமேஸ்வரன், தயாளன் எஸ்.சௌந்தரராஜன் த.சுகுமார்,சிற்றரசு, ஜெயபுகழேந்தி, உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி பேரூர் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பேரூர் செயலாளர் இரா. அறிவழகன் ஏற்பாட்டில் பேரூர் அவை தலைவர் இ.ரா.ரமேஷ் தலைமையில் நடைப்பெற்றது, கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டிஜெ.கோவிந்தராஜன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார் உடன் மாநில மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

திருவேற்காடு நகராட்சியில்

## 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரேஷன் கடை - மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர். ஏப்.13

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் 8வது வார்டு ராஜாங்குப்பம் பகுதியில் 30 லட்சம் மதிப்பீட்டில் ரேஷன் கடை திறப்பு விழா, 15வது வார்டு மாதிராவேடு பகுதியில் 60 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணிகளை துவக்க விழா நடைபெற்றது. இதில் நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தலைமை தாங்கி புதிய ரேஷன் கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து மாதிராவேடு பகுதியில் 6 லட்ச ரூபாய் மதிப்பீடு மழை நீர் கால்வாய் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து அங்குள்ள பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர், நகர மன்ற துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ், நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, ஒன்றிய நகர மாநகரக் கழகச் செயலாளர்கள் ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலைசன். பிரகாஷ் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், நகர நிர்வாகிகள் பெஞ்சமின், நடராஜ், குமாரசாமி, ஜெ. சரவணன், செல்வதுரை, ஜோதிநாதன்

வார்டு செயலாளர்கள் ராங்கதுரை, மா.விநாயகம், சாது, இளங்கோவன் பி. உமாபதி, பி.வி.கே.கண்ணன், பன்னீர்செல்வம், ஜெகன், சுதாகர், தெய்வசிகாமணி, கோபால், கெஜா, குமார், சாந்தி ராஜா, ஆனந்தி ரமேஷ், இளையராஜா, என்.ராஜ், நும்பால்ஆசைதம்பிஅப்பு (எ) ஜெப ராஜன், ஆ.நாராயணன், மு.சுரேஷ், நரேஷ், குடியரசு, சுதாகர் திவாகர், பேபிஸ்ரீ, அமலேஷ்வரி, ராஜேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை பங்கேற்பு! ந.மோ.முரளி தலைமை! தியாகராயர் நகர்

## 132வது வட்டத்தில் நீர்மோர் குடில் திறப்பு!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராய நகர் மேற்கு பகுதி, 132 வது வட்டத்தில் பொதுமக்களின் தாகம் தீர்க்கும் நீர் மோர் குடில் திறப்பு விழா இன்று (13.4.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் யுனைடெட் இந்தியா காலனி, காமராஜர் காலனி இரண்டாவது தெரு, ரங்கராஜபுரம் பிரதான சாலை, பூபதிநகர் Q பிளாக்கில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு லட்டச் செயலாளர் ந.மோ.முரளி தலைமை வகிக்கிறார்.

எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு. சத்யா, கே.எஸ். வெல்டிங் ராஜா, சா.தேவராசு, கார்த்திகா பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

க.சந்துரு, ச.சங்கர், என். டி.ஆர் வேலு, த.ராஜசேகரன், எம்.ராமச்சந்திரன், மு. லோகு, மேம்பாலம் சேகர், பிரஸ் கோவிந்தன், குப்பம்மாள், பி வேலு, எஸ் விஜயன் , ரஜினி சுந்தர் பிலிப், கே.தேவராஜ், எட்வின், என்.எ.ராமநாதன், கே. ஜெலந்தர், எ.நோபல், ஆர். வசந்த், எஸ்.பி.சசி, து.மங்கள் ராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

தண்ணீர் குடிலை மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை ஆகியோர் திறந்து வைத்து பழரசங்கள், நீர் மோர் வழங்குகின்றனர்.

இதில் கோ சு மணி, டி. மோசஸ், அஸ்வின் குமார், எஸ். கே.நசீர், ச.இளவரசன், மு.சரவணன், நா.மு. தமிழ், து.ஆனந்தராஜ், எஸ். மணிகண்டன், மு.பாலகுரு, எ.மணிரத்தினம், பா.புகழ், வழக்கறிஞர் பரத், பி.எஸ். ராசன், செல்வம், சேகர், ஆர்ட்டிஸ்ட் பி.ஜெயவேலு, கார்த்திக், க.பிரசாந்த், மே.ரவிபிரசாத், க.கலையரசன், மு.உதயநிதி, ஆர்.விக்னேஷ், எம். செந்தில் மற்றும் மாவட்ட கழக வட்டக் கழக மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்

நிகழ்ச்சி ஏற்பாட்டை கோடம்பாக்கம் மு.சத்யா, சுந்தர் பிலிப், எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் செய்கின்றனர்.

மயலை த. வேலு-தமிழச்சி தங்கபாண்டியன் - ஜெ.கருணாநிதி - கே. ஏழுமலை பங்கேற்பு!

## கோடம்பாக்கம் பவர்ஹவுஸில் அம்பேத்கர் சிலைக்கு மரியாதை!

### வட்டச் செயலாளர் ந.மோ.முரளி வேண்டுகோள்!

சென்னை, ஏப். 13-

தியாகராயர் நகர் 132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு நாளை (14.4.2025-திங்கட்கிழமை) காலை 10:30 மணியளவில் கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் அருகில் உள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச்சிலைக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பகுதி அமைப்பாளர் எஸ்.ஜி.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் எஸ்.ஜி.மாதவன் தலைமையில்

## மதுரவாயல் வடக்குப் பகுதி மாணவர் அணி சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா!

### நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப். 13

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி மாணவர் அணி சார்பில் பகுதி மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஜி.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் கங்கா நகர் ஆட்டோ நிறுத்தம் அருகில் பொதுமக்களின் தாகம் தீர்த்திட நீர் மோர் பந்தல் திறப்பு விழா இன்று (13.04.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் தலைமை வகிக்கிறார்.

வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கின்றனர்.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைக்கிறார்.

இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கலந்து கொள்ள உள்ளதால் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


